**Crl.Misc.39**

**Chapter XXIII code of Criminal procedure**
**DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,**
**SHOLINGANALLUR**
**DEPOSITION OF WITNESS**

**Calender :**
**Miscellaneous : CC.No.1107/2024**
**Preliminary Register :**
**Police Station : PS**

**Deposition of witness for :LW3/PW3**
**:**

**Name : Balakrishnan**
**:S/o. Selvaraj**

**:**
**Village :**
**Taluk :**
**Caste :**
**Calling :**
**Religion :**
**Age :**

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.10.2025**
**(எதிரி ஆஜர் , எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)**

<u>அரசு தரப்பு முதல் விசாரணை:</u>

நான் சின்ன நீலாங்கரையில் வசித்து வருகிறேன். நான் மீனவன். கடந்த 06.07.2024 அன்று கடலுக்கு மீன்பிடிப்பதற்காக இரவு 06.30 மணி அளவில் சென்று விட்டு 10.30 மணி அளவில் வீடு திரும்பினேன். அதன் பின்பு மறுநாள் பஞ்சாயத்திற்கு சென்று விட்டேன். எனக்கு சம்பவத்தை பற்றி எதுவும் தெரியாது. பஞ்சாயத்தில் சண்டை நடந்ததாக கூறினார்கள். நந்தகுமாருக்கும் தீபக் அவர்களுக்கிடையே சண்டை நடந்ததாக கேள்விப்பட்டேன். இவ்வழக்கை பற்றி வேறு எந்த விவரமும் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

(சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்கப்பட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது)

அரசு தரப்பு குறுக்கு விசாரணை

போலீஸ் விசாரணையின் பொழுது கடந்த 06.07.2024 தேதி இரவு சுமார் 10:30 மணி அளவில் ஆஜர் எதிரிக்கும் தீபக் என்பவருக்கும் வாக்குவாதம் நடந்து கொண்டிருந்ததை பார்த்ததாகவும் அதில் தீபக்கை நந்தகுமார் தகாத வார்த்தையால் திட்டியதாக மீன் வெட்டும் கத்தியை வைத்து உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று கூறி தலையில் வெட்டியதாக அதை நான் பார்த்ததாக போலீஸ் விசாரணையின் போது கூறிவிட்டு தற்பொழுது எதிரி தனது ஊரை சேர்ந்தவர் என்ற காரணத்திற்காக எதிரியை இவ்வழக்கில் இருந்து காப்பாற்ற உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நீங்கள் ஆஜர் எதிரிக்கு உறவினர் தான் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை :** இல்லை

Sd/-M.N.ராஜநந்திவர்மசிவா,
மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர்,
சோழிங்கநல்லூர்.

**Crl.Misc.39**

**Chapter XXIII code of Criminal procedure**
**DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,**
**SHOLINGANALLUR**
**DEPOSITION OF WITNESS**

**Calender :**
**Miscellaneous : CC.No.1107/2024**
**Preliminary Register :**
**Police Station : Neelangarai PS**

**Deposition of witness for :LW6/PW6**
**:**

**Name : Ashok Kumar**
**:S/o. Munusamy**

**:**
**Village :**
**Taluk :**
**Caste :**
**Calling :**
**Religion :**
**Age :**

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of10.10.2025**
**(எதிரி ஆஜர் , எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)**

<u>அரசு தரப்பு முதல் விசாரணை</u>

நான் சின்ன நீலாங்கரையில் வசித்து வருகிறேன். நான் மீன்பிடி தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரி எனது பகுதியை சேர்ந்தவர். தொழில் சம்பந்தமாக அவரை எனக்கு தெரியும். சிவகுமார் மற்றும் ஆஜர் எதிரிக்கு உள்ள பிரச்சனை சம்பந்தமாக ஒரு வருடத்திற்கு முன்பு தேதி மற்றும் மாதம் ஞாபகம் இல்லை. நீலாங்கரை காவல் நிலையத்தில் நான் மற்றும் பாலகிருஷ்ணன், ஆனந்தன், சேகர், சந்தோஷ் குமார் ஆகியோர்கள் கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல்

வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். கைபற்றுதல் மகசரில் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல. ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள என்னுடைய கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

(சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்கப்பட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது)

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>

எனது முதல் விசாரணையில் நாங்கள் ஐந்து நபர்கள் காவல் நிலையம் சென்று கையொப்பம் செய்ததாக கூறியுள்ளேன். ஏன் அந்த ஐந்து நபர்கள் அங்கு சென்றீர்கள் என்றால் எங்கள் ஊரில் பஞ்சாயத்துதாரர்கள் என்று 15 நபர்கள் உள்ளனர். அதில் நாங்கள் ஐந்து நபர்கள் காவல் நிலையத்திற்கு சென்றோம். ஆஜர் எதிரிக்கும் சிவகுமாருக்கும் வீடு பிரச்சனை இருந்ததால் அதனால் எங்களை அழைத்தார். அதற்காக சென்றோம். நான் சம்பவத்தை பார்க்கவில்லை. அவர்களுக்குள் வாய் தகராறு இருந்ததாக கேள்விப்பட்டேன். யார் யார் இடையே என்ன நடந்தது என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. பொதுவாக யாருக்கு இடையே பிரச்சனை மற்றும் சண்டை ஏற்பட்டால் நாங்கள் சமாதானம் செய்வது வழக்கம் என்றால் சரிதான்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

நாங்கள் பஞ்சாயத்துதாரர் என்பதால் காவல் நிலையம் அவ்வப்போது சென்று வருவோம் என்றால் தேவைப்பட்டால் செல்வோம். அந்த காலகட்டத்தில் சிவகுமாரும் பஞ்சாயத்துதாரரின் உறுப்பினர் என்றால் சரிதான். நாங்கள் காவல் நிலையம் செல்வதால் காவல் நிலைய உயர் அதிகாரிகள் எனக்கு தெரியும் என்றால் அந்த அளவுக்கு எனக்கு தெரியாது ஆனால் தெரியும். சிவகுமாரும் வேறு பிரச்சனைக்காக காவல் நிலையம் வந்துள்ளார் என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை :</u>** இல்லை

Sd/-M.N.ராஜநந்திவர்மசிவா,
மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர்,
சோழிங்கநல்லூர்.

**Crl.Misc.39**

**Chapter XXIII code of Criminal procedure**
**DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SHOLINGANALLUR**
**DEPOSITION OF WITNESS**

**Calender :**
**Miscellaneous : CC.No.1107/2024**
**Preliminary Register :**
**Police Station : Neelangarai PS**

**Deposition of witness for :LW5/PW5**
**:**

**Name : Sekar**
**:S/o. Kilikannu**

**:**
**Village :**
**Taluk :**
**Caste :**
**Calling :**
**Religion :**
**Age :**

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.10.2025**
**(எதிரி ஆஜர் , எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)**

அரசு தரப்பு முதல் விசாரணை

நான் சின்ன நீலாங்கரையில் வசித்து வருகிறேன். நான் மீன்பிடி தொழில் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்து எதற்காக போட்டேன் என்று எனக்கு ஞாபகம் இல்லை. எப்பொழுது போட்டேன் என்று எனக்கு ஞாபகம் இல்லை. அந்த கையெழுத்தை நீலாங்கரை காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன். ஆஜர் எதிரி சாட்சி தீபக் சிவகுமார் ஆகியவர்கள் எனது ஊரை சேர்ந்தவர்கள். அந்த

கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

( சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்கப்பட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது)

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>

கடந்த 07.07.2024 அன்று மதியம் 12 மணியளவில் சண்டை வழக்கு சம்பந்தமாக போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் தயார் செய்து அதற்கு சாட்சியாக பார்வை மகசரில் கையொப்பம் கேட்டதற்கு சாட்சியாக இருந்து கையொப்பம் செய்துவிட்டு தற்பொழுது எதிரி எனது ஊரை சேர்ந்தவர் என்பதற்காக அவரை வழக்கில் இருந்து காப்பாற்ற உண்மைக்கு புறம்பாக சாட்சி அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை :</u>** இல்லை

Sd/-M.N.ராஜநந்திவர்மசிவா,
மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர்,
சோழிங்கநல்லூர்.

**Crl.Misc.39**

**Chapter XXIII code of Criminal procedure**
**DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,**
**SHOLINGANALLUR**
**DEPOSITION OF WITNESS**

**Calender :**
**Miscellaneous : CC.No.1107/2024**
**Preliminary Register :**
**Police Station : Neelangarai PS**

**Deposition of witness for :LW4/PW4**
**:**

**Name : Anandan**
**:S/o.**

**:**
**Village :**
**Taluk :**
**Caste :**
**Calling :**
**Religion :**
**Age :**

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of10.10.2025**
**(எதிரி ஆஜர் , எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)**

<u>அரசு தரப்பு முதல் விசாரணை</u>

நான் சின்ன நீலாங்கரையில் வசித்து வருகிறேன். நான் மீன்பிடி தொழில் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது தான். அதை நான் கடந்த 07.07.2024 மாலை 6 மணி அளவில் நீலாங்கரை காவல் நிலையத்தில் சிவகுமார் மற்றும் நந்தகுமார் ஆகியவர்கள் சமாதானம் ஆவதாக கூறியதற்காக சாட்சியாக கையொப்பம் செய்தேன். அந்த கையொப்பம் மட்டும் அதசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

(சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்கப்பட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது)

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>

இரண்டு பேருக்கு இடையே சமாதானத்திற்காக கையொப்பம் செய்தேன் என்று கூறியதற்கு காரணம் என்னவென்றால் என்ன சண்டை என்று எனக்கு தெரியாது. ஆனால் நீலாங்கரை காவல் நிலையத்தில் எழுதாத வெத்து பேப்பரில் என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். சமாதானம் ஆவதற்காக தான் கையொப்பம் வாங்கினார்கள் என்று கையொப்பம் செய்தேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் கையொப்பம் செய்த பொழுது சிவகுமாரும் பஞ்சாயத்துதாரரில் ஒரு உறுப்பினர் என்றால் சரிதான். சிவகுமாரும் தீபக்கமும் இடையே அடிக்கடி சண்டை போடுவது சகஜம் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. தற்சமயமும் சிவகுமாரும் தீபக்கும் வேறு ஒருவருடன் சண்டை நடந்தது என்றால் சரிதான். சிவகுமார் மற்றும் தீபக் ஊர் பஞ்சாயத்துக்கு கட்டுப்படுவார்களா என்றால் சில நேரத்தில் கட்டுப்படுவார்கள் சில நேரத்தில் கட்டுப்பட மாட்டார்கள் .

**<u>மறுவிசாரணை :</u>** இல்லை

Sd/-M.N.ராஜநந்திவர்மசிவா,
மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர்,
சோழிங்கநல்லூர்.